


கழகத்தின் முன்கள வீரர்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தி.மு.க. இளைஞர் அணியின் பணிகளை மேலும் வலிமைப்படுத்தும் விதமாக தொடர் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வரும் இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அந்த வகையில், இராமநாதபுரம் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை நேற்று முன்தினம் நேரில் ஆய்வு செய்தார். இளைஞரணிப் பொறுப்புக்கு வந்து கிட்டத்தட்ட ஓராண்டு நிறைவுற்றுள்ள நிலையில், கழகத்துக்குச் செய்துள்ள பங்களிப்புகள் குறித்து அமைப்பாளர் துணை அமைப்பாளர்களிடம் கேட்டறிந்தோம். இல்லந்தோறும் இளைஞரணி முன்னெடுப்பின் தற்போதை நிலவரம் – சேலம் இளைஞரணி மாநில மாநாட்டுக்காக இளைஞர்களை ஒருங்கிணைத்த விதம் நாடாளுமன்றத் தேர்தல் & விக்கிரவாண்டி இடைத்தேர்தல் களத்தில் ஆற்றிய பணிகள் – சமூக வலைத்தளம் மற்றும் களத்தில் கழகத்திற்கு எதிரான அவதூறுகளை முறியடிப்பது, கழக அரசின் சாதனைகளை கொண்டு சேர்ப்பது – கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகம் திறக்கும் பணிகள் – கலைஞர் 100 பேச்சுப் போட்டிக்கான ஏற்பாடுகள் உள்ளிட்டவை குறித்து, மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் நம்மிடம் விரிவாக எடுத்துரைத்தனர். அவர்களின் பணிகளுக்கு சான்றாகக் கொண்டு வந்திருந்த மினிட் புத்தகம் – செய்திக்குறிப்பு – புகைப்படங்களைப் பார்வையிட்டு, இராமநாதபுரம் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களின் பணிகள் சிறக்க வாழ்த்தினோம் என்று தமது வலைதளப் பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.







கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின் பேரில், இளைஞரணி மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் , துணை அமைப்பாளர்கள் பணிகளைத் தொடர்ந்து ஆய்வு செய்து வரும் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அந்த வரிசையில் நேற்று முன்தினம், தஞ்சை வடக்கு மாவட்டம் மற்றும் கும்பகோணம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் , துணை அமைப்பாளர்களின் ஓராண்டுப் பணிகளை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, கழகத்தலைமை இளைஞரணிக்கு வழங்கியுள்ள பணிகள், இளைஞரணி சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களிடம் விரிவாக கேட்டறிந்தோம். இல்லந்தோறும் இளைஞரணி – கலைஞர் 100 பேச்சுப் போட்டிக்கான ஏற்பாடுகள் தொடர்பாக நடைபெற்று வரும் பணிகளை விளக்கியதோடு, நீட் ஒழிப்புப் போராட்டங்கள், கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு நூலகம் திறந்தது, இளைஞரணி மாநாட்டுப் பணிகள் என இதுவரை மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளை விளக்கினர். கழக இளைஞரணி இன்னும் பல உயரங்களைத் தொடுகிற வகையில் பணியாற்றிட அவர்களை வாழ்த்தினோம் என்று, இது தொடர்பாக வலைதளப்பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




